දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

பொதுக் கலைமாணி (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) (ஒக்ரோபர் 2019)

# பொருளியல் II
# ECG 2 ஒப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 08 ஆகும்.
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
( ஓதுக்கப்பட்டுள்ள நேரம்: மூன்று மணித்தியாலங்கள் )

1. (i) 'நவீன பொருளாதார வளர்ச்சி' என்பதனால் கருதப்படுவது யாது? (10 புள்ளிகள்)

   (ii) மேற்கு ஐரோப்பாவில், நவீன பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு முன்தேவையாக மானிய முறையின் வீழ்ச்சியினைக் கருதுவது ஏன்? (10 புள்ளிகள்)

2. (i) பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், பெரிய பிரித்தானியாவில், கைத்தொழிலாக்க செய்முறைக்கு, அந்நாட்டின் விவசாயப் புரட்சியின் பங்களிப்புக்களை ஆராய்ந்து, மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

3. (i) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பெரிய பிரித்தானியாவின் கைத்தொழில் துறையின் அபிவிருத்திச் செய்முறையினை விபரிப்பதற்குக் 'கைத்தொழில் புரட்சி' என்ற பதம் எந்தளவிற்குப் பொருத்தமானது? (உமது விடையானது சுருக்கமும் தெளிவும் கொண்டதாக அமைதல் வேண்டும்) (10புள்ளிகள்)

   (ii) பெரிய பிரித்தானியாவின் கைத்தொழில் முறைமாற்றத்தில், பருத்தி நெசவுக் கைத்தொழில் தொடர்பான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களின் வகிபாகம், அவற்றின் முக்கியத்துவம் ஆகியவை குறித்துச் சுருக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரிய பிரித்தானியாவினதும், பிரான்சினதும் விவசாயத் துறைகளுக்கிடையிலான ஒன்றுமைகள்/வேற்றுமைகளைப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

5. (i) ஜேர்மனியின் 'ஸொல்வரின்' ஐக்கியத்தின் பிரதான அம்சங்களை விளக்குக.(06 புள்ளிகள்)

   (ii) பத்தொன்பதாம் நூற்றாண்டில், உள்நாட்டு வர்த்தகத்தின் விரிவாக்கத்திற்கு ஊடாக ஜேர்மனியின் பொருளாதார அபிவிருத்திக்கு 'ஸொல்வரின்' ஐக்கியத்தின் பிரதான பங்களிப்புக்களை ஆராய்க. (14 புள்ளிகள்)

6. ஒன்றில் பெரிய பிரித்தானியாவில் அல்லது ஜேர்மனியில் ஒரு நவீன போக்குவரத்து முறையின் உருவாக்கத்தின் பொருளாதார, சமூக முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

7. ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் விசேட கவனம் செலுத்தி, பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பிய நாடுகளின் பொருள்ாதார அபிவிருத்திச் செய்முறையில் அரசின் வகிபாகத்தினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:-

(i) போர்க்காலக் கம்யூனிசம்
(ii) சோவியத் ரஷ்யாவின் 'புதிய பொருளாதாரக் கொள்கை'
(iii) வணிகவாதம்
(iv) இரண்டாம் நில அடைப்பு இயக்கம்
(v) 1815 ஆம் ஆண்டின் தானியச் சட்டம்

(05 x 04=20 புள்ளிகள் )

---